பேரவையால் நிறைவேற்றப்பட்டு, இம்மேலவையின் ஒப்புதலுக்காக, கீழ்க்கண்ட சட்ட முன்வடிவுகள் பேரவைத் தலைவரால் அனுப்பப்பட்டுள்ளன என்பதை அவைக்கு அறிவிக்கிறேன்:—

1. தமிழ்நாடு, 1975ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (நிலத்திற்கு உச்சவரம்பு கட்டுதல்) இரண்டாம் திருத்த சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 13/1975).

2. தமிழ்நாடு, 1975ஆம் ஆண்டு, குடியிருப்புதாரர்கள் (வெளியேற்றப்படுவதினின்று பாதுகாத்தல்) மறு சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 14/1975).

3. 1975ஆம் ஆண்டு, சென்னை மாநகர குடியிருப்புதாரர்கள் பாதுகாப்பு (திருத்த) சட்ட முன்வடிவு சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 47/1974).

3. கவன ஈர்ப்பு.

(1) புகுமுக வகுப்புத் தேர்வில் பௌதிக வினாத்தாள் தொடர்பான குறிப்புகளில் குழப்பம் குறித்து.

திரு ஜி. சுவாமிநாதன் : துணைத் தலைவரவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்:—

"மார்ச் 27 ஆம் நாளன்று நடைபெற்ற புகுமுக வகுப்புத் தேர்வின் போது, பௌதிக வினாத்தாள் தொடர்பான குறிப்புகளில் குழப்பம் ஏற்பட்டு, இந்தக் குழப்பம் காரணமாக மேற்படி தேர்வு எழுதிய மாணவர்கள் குறைந்தது 25 சதவீத அளவிலேனும் தங்களுக்குரிய பாடமுறைக்கு அப்பாற்பட்ட வினாக்களுக்கு விடையளிக்க வேண்டி வந்தது காரணமாக ஆயிரக்கணக்கான மாணவர்களுக்கு ஏற்பட்டுள்ள இன்னல் குறித்து".

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : துணைத் தலைவரவர்களே, புகுமுக வகுப்புகளுக்கான தேர்வுகள் நடத்துவது பல்கலைக் கழகத்தின் பொறுப்பாகும். பல்கலைக் கழகக் கல்வி சம்பந்தமான பொருள்களில் அரசு தலையிடுவதில்லை.

இந்தக் கேள்வித்தாள்கள் சம்பந்தமான குழப்பம் சென்னைப் பல்கலைக் கழகத்தின்கீழ் இயங்கிவரும் கல்லூரிகளில் மட்டுமே ஏற்பட்டுள்ளது. மதுரைப் பல்கலைக் கழக எல்லைக்குள் இயங்கும் கல்லூரிகளில் இந்தக் குழப்பம் ஏற்படவில்லை என்று பதிவாளர் தெரிவித்துள்ளார்.

புகுமுக வகுப்புத் தேர்வில் பௌதிக வினாத்தாள் தொடர்பான குறிப்புகளில் குழப்பம் குறித்து

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1975 ஏப்ரல் 19

சென்னைப் பல்கலைக் கழகப் பதிவாளரிடமிருந்து கிடைத்துள்ள அறிக்கையின் சுருக்கம் பின்வருமாறு :—

பௌதிகத்தில் புகுமுகத் தேர்வுக்காக இரண்டுவிதமான கேள்வித் தாள்கள் தயாரிக்கப்பட்டன. ஒன்று 1974–75லிருந்து அமுலாக்கப்பட்ட புதிய பாடத் திட்டத்திற்கேற்பவும் (நியூ ஸிலபஸ்) மற்றொன்று 1971-72-லிருந்து அமுலிலிருந்து வருகின்ற திருத்திய பாடத் திட்டத்திற்கேற்பவும் (ரிவைஸ்டு ஸிலபஸ்) தயாரிக்கப்பட்டதாகும். எந்தத் தொகுப்பைச் சேர்ந்த மாணவர்கள் எந்தக் கேள்வித்தாளுக்கு விடையளிக்க வேண்டுமென்ற விவரம் கேள்வித்தாள்களில் விளக்கமாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. தேர்வு நிலையங்களில் கேள்வித்தாள்களை வழங்கும்போது, குழப்பம் ஏற்படாமல் இருக்கும்பொருட்டு, பல ஆண்டுகளாகப் பின்பற்றி வரும் முறைப்படி மேலே கூறப்பட்ட இரண்டு வினாத்தாள்களையும் இணைத்து ஒரே சிற்றேடாக்கி மாணவர்களுக்கு வழங்கப்பட்டது. சென்னை விவேகானந்தா கல்லூரியில் சில மாணவர்கள் கேள்வித்தாள்களைத் தவறாகப் புரிந்துகொண்டு, தங்களுக்கில்லாத கேள்வித்தாள்களுக்கும் விடை அளித்தார்கள் என்ற விவரம் சென்னைப் பல்கலைக் கழகத்திற்குக் கிடைத்தது. ஏனைய கல்லூரிகளில் இது போன்ற குழப்பம் ஏற்படவில்லை. மாணவர்கள் தவறான கேள்வித் தாளுக்கு விடையளித்திருந்த போதிலும் அவர்களது விடைத்தாள்களை ஏற்றுக்கொண்டு அதற்குரிய மதிப்பெண்கள் வழங்கப்படுமென்று பல்கலைக் கழகம் அறிவித்துள்ளது.

Thiru G. SWAMINATHAN : There seems to be a real grievances among the students. It seems that in the hall ticket it was mentioned that it would be for the revised syllabus for those who appeared in March 1975 and one question paper was given for both the new and revised syllabi. I do not know why such a mature University as the Madras University has given one question paper for both new and revised syllabi. In some of the places, the invigilators themselves have not understood how the students should write the examination. In some places the students have been asked to write even up to 6 O' clock, when the examination ought to have been over by 4-30 p.m. Since a number of students—thousands of students—have been affected, will the Hon. Minister see that there is liberalised valuation regarding the P.U.C. Physics paper ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : துணைத் தலைவரவர்களே, நான் முதலிலேயே குறிப்பிட்டபடி, கல்லூரிகளுக்கான தேர்வுகளை நடத்தும் முறையைப் பல்கலைக் கழகம்தான் மேற்கொண்டிருக்கின்றது. இதிலே மூன்று விதமான பாடத் திட்டங்கள், ஓல்டு ஸிலபஸ், ரிவைஸ்டு ஸிலபஸ், மற்றும் நியூ ஸிலபஸ் என்று மூன்று வகையாக இருந்து வருகின்றன. இன்னும் சிலர் ரிவைஸ்டு ஸிலபஸ் என்ற திட்டத்தின்கீழ் எழுதிவருகின்றார்கள். அவர்களுக்காக ரிவைஸ்டு ஸிலபஸ் அடிப்படையில் கேள்வித் தாள்களைக் கொடுக்க வேண்டியிருக்கிறது. இடையிலே நியூ ஸிலபஸ்

1975 எப்ரல் 19] (டாக்டர் இரா. நெடுஞ்செழியன்)

என்றும் வந்துவிட்டது. இந்தக் கேள்வித்தாள்களிலே அவர்களுக்கு எந்தக் குழப்பமும் ஏற்படக்கூடாது என்றுதான் பல்கலைக் கழகம் இந்த முறையைக் கையாண்டிருக்கின்றது என்று அவர்களே குறிப்பிட்டார்கள். அந்தக் கேள்வித்தாள்களையே வாங்கிப் பார்த்தேன். இரண்டு கேள்வித் தாள்களுக்கான புத்தகங்களை ஒன்றாக இணைத்திருக்கின்றார்கள். தனித் தனியாக வைத்தால், ஒன்றுக்கொன்று மாணவர்களிடம் வரும்போது மாறிவிடக்கூடும் என்று அஞ்சி, இரண்டையும் ஒன்றாக இணைத்து, எந்தத் திட்டத்தின் கீழ் எழுதுகின்றார்களோ அவர்கள் அதற்கான கேள்வித் தாளை எடுத்துக்கொள்ளலாம் என்று இந்த ஏற்பாட்டைச் செய்திருக் கின்றார்கள். ஒன்றுக்கொன்று மாறிப்போய் இப்போது ஏற்பட்டுள்ள குழப் பமோ சங்கடமோ ஏற்படக்கூடாது என்ற எண்ணத்தின் அடிப்படையில்தான் இதைச் செய்தார்கள். இது இன்று நேற்று இல்லை, பல ஆண்டு காலமாக பின்பற்றி வரும் முறையாகும். சென்னையில் இரண்டொரு கல்லூரிகளில் தவிர வேறு எந்தக் கல்லூரியிலும் மாணவர்களிடையில் இத்தகைய குழப்பம் ஏற்படவில்லை. விவேகானந்தா கல்லூரியிலும், ஜெயின் கல்லூரி யிலும்தான் இந்தக் குழப்பம் ஏற்பட்டது. அவர்களுக்கு ஏற்பட்ட குழப் பமே, அங்குள்ள சூபர்வைசர்களுக்கு ஏற்பட்ட குழப்பம் காரணமாகத் தான். அவர்கள் இதை மாணவர்களுக்குத் தெளிவுபடுத்த முடியாத குழப்பம் ஏற்பட்ட காரணமாகத்தான், மாணவர்களிடையிலே குழப்பம். எட்டுப் பாடங் கள் என்றால், மூன்று, நான்கு பாடங்களுக்குத்தான் நியூ ஸிலபஸ். மற்றவற்றுக்கு ரிவைஸ்டு ஸிலபஸ்தான். இப்படி இரண்டு, மூன்று இடங் களிலே குழப்பம் ஏற்பட்டது குறித்து பல்கலைக் கழகத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டவுடன், அவர்களும் கேள்வித்தாளமைப்பில் தவறு எதும் இல்லை, ஆனால் அதிலேற்பட்ட குழப்பத்திற்கே காரணம், அதற்கான விளக்கத்தைச் சரியான முறையில் கொடுக்காதது என்பதையும், விவே கானந்தா கல்லூரி முதல்வர் அவர்கள் வெளியிட்ட அறிக்கையில்கூட இதையே வலியுறுத்திய பின்னர், பல்கலைக் கழகத்திலும், தேர்வு எழுதிய மாணவர்களுக்குப் பாதகம் ஏற்படாத வகையில் கவனிக்கப்படும் என்று அவர்களும் பொறுப்பேற்றுக்கொண்டு பதில் கூறியிருக்கின்றார்கள். இதற் குப் பின்னரும் தேர்வுகள் நடைபெற்றன. லாஜிக்கிலும் மற்றவற்றிலும் தேர்வுகள் நடைபெற்றன. அவற்றில் இத்தகைய குழப்பங்கள் வரக் கூடாது என்று மீண்டும் தெளிவான சுற்றறிக்கைகள் அனுப்பப்பட்டு, அவை முறையாக நடந்திருக்கின்றன. ஆக தெளிவான முறையில் மாண வர்களுக்கு இவற்றை எடுத்துச்சொல்லியிருந்தால், இதுபற்றிய குழப்பமே ஏற்பட்டிருக்காது. பொதுவாக தேர்வு எழுதப்போகும் மாணவர்களே கால்வாசி குழம்பித்தான் போயிருப்பார்கள். அத்துடன் இந்தக் குழப்ப மும் சேர்ந்து விட்டது. இனியும் அந்தமாதிரி ஏற்படாத வண்ணம் சூபர்வைஸர்ஸ்க்கு அறிவுரை வழங்க வேண்டும் என்று பல்கலைக் கழகம் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கின்றது. பல்கலைக் கழக ரெஜிஸ்ட்ரார் அவர் களும் வாக்குறுதி அளித்திருக்கின்றார்கள். உறுப்பினர் அவர்கள் கோரி யதைப்போல, தேர்வு எழுதிய மாணவர்களுக்கு எந்தவிதமான பாதகமும் ஏற்படாதவகையில் பார்த்துக்கொள்ளப்படும்.